## கொழும்பு மாநகர சபை

## கொழும்பு மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி நகர பிதாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,640,047,138 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வங்கி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அது ரூபா 1,640,904,857 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 857,719 இனால் முதலீட்டுப் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய சம்பள மீளளிப்புத் தொகை 2,742,988,306 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,498,238,432 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் சம்பள மீளளிப்பு ரூபா 244,749,874 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 9,546,085 தொகை நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மோட்டார் வாகனங்களைத் தரித்து வைத்தலை முகாமைத்துவம் செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையான ரூபா 5,754,683 தொகை நானாவித கடன்பட்டோரின் கீழ் உள்ளடக்கப்படாமையினால் அப்பெறுமதியால் கடன்பட்டோர் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதியில் உள்ள 7,960 ஆதனங்களுக்குரிய ரூபா 214,076,367 கூட்டுத்தொகையான செலவு மீதி கணக்குகளில் பிரத்தியேகமாக வெளிப்படுத்துவதற்குப் பதிலாக நிலுவை ஆதனவரி (வரவு) மீதியில் சீராக்கப்படாமையின் காரணமாக, உள்ளபடியான மீதி கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

49 கணக்கு விடயங்களுக்குரியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும், அதற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,029,825,262 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாடுகளுக்குரிய காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) 17 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 26,112,325 தொகையான பெற வேண்டிய 24 கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல வருட காலமாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சில்லறைக் காசு மற்றும் விசேட முற்பணம் என்பன கணக்குகளில் தீர்க்கப்படாதிருந்த ரூபா 3,183,108 தொகையான மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) சபைக்கு கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் மீதியில் செயற்பாடற்ற 3,298 கணக்குகளுக்குரிய பெறுமதி ரூபா 395,801,868 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 17 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய வைப்புக்களான ரூபா 99,848,922 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட ரூபா 19,722,493 வரித்தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்காமல் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 16,275,106,238 கூட்டுத்தொகையான 55 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் | | | |
| | (i) | 218 ஆம் பிரிவு | - | நிதியாண்டின் நிர்வாகம் தொடர்பான விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | (ii) | 247(ஆ) பிரிவு | - | வியாபார வரிகளுக்குரிய தொழில் முயற்சிகளை இனங்கண்டு அதற்கு வரி விதிப்பதற்கும், வரி செலுத்தாது புறக்கணிக்கின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சபை செயற்படாதிருந்தமையால் சபைக்கு கவனத்தில் கொள்ளக்கூடிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆவது அத்தியாயம் | | - | விடுதிகளை வகைப்படுத்தி அதன் பிரகாரம் காத்திருத்தல் பதிவேட்டில் விண்ணப்பதாரரின் பெயரை உள்ளடக்கி அந்த ஒழுங்குமுறையின் பிரகாரம் விடுதிகளை ஒதுக்குவதற்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 371(6) | 3,183,108 | சில்லறைக் கட்டுநிதியை உரிய நிதியாண்டின் போதே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 395(இ) | - | 06 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் 03 மாதம் முதல் 18 மாதம் வரையிலான தாமதம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| | (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 20,667,004 | வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தையுடைய காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 715(2)(உ) | - | கெம்பல் பார்க்கில் வீதி அடையாளப் பிரிவின் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு கிடைக்கின்ற மற்றும் விநியோகிக்கின்ற இருப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்படாமை |
| (v) | நிதிப்பிரமாணம் 762 | 3,685,125 | தேவையான அளவிற்கு இருப்பை பேணுவதற்கும், மேலதிக இருப்புக்களை பேணாதிருப்பதற்கும் விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய போதிலும், வீதி சமிஞ்சை பிரிவின் களஞ்சியத்திலும், சுதுவெல்ல களஞ்சியத்திலும் காலவதியான தர்மோ பிளாஸ்டிக் இருப்பொன்று குவித்து வைக்கப்பட்டிருந்தது. |
| (vi) | நிதிப்பிரமாணம் 1653 | - | 03 மாவட்ட அலுவலகங்களில் உள்ள 32 வாகனங்களின் மைலோமீற்றர் செயலிழந்து காணப்பட்டதுடன், அதனை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | நிலையான சொத்துக்களை கணக்கு வைக்கும் போது முறையான திட்டமொன்று சபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட கணனி அறிக்கையின் (CD) பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடம் தொடர்பாக கண்டறியக் கூடிய முறைமையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1987 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 08 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றறிக்கை | 733,098,863 | நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கில் காசாக இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | 666,397,877 | நகர அபிவிருத்தி அதிகார சபையின் விசேட வங்கிக் கணக்கும் அதற்குரிய பொறுப்புக் கணக்குமான அரசாங்க பிரதிநிதித்துவக் கணக்கின் இரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 666,397,877 தொகையான வேறுபாடு காணப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,382,289,817 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,042,313,090 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 03 நடைமுறைக்கணக்குகளுக்குரியதாக ரூபா 26,143,590 தொகையான நேரடி செலவு வைத்தல் மற்றும் பிழையாக செலவு வைக்கப்பட்டவைகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 02 நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு 01 வருடம் முதல் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 238,605,706 தொகையான தேறாத காசோலைகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,184,150,000 | 3,617,947,176 | 3,296,218,745 | 2,866,777,928 | 3,866,930,000 | 3,248,676,453 | 3,188,725,003 | 2,626,877,427 |
| வாடகை | 312,249,000 | 209,246,261 | 188,877,437 | 840,333,827 | 305,670,000 | 176,208,721 | 141,6000,243 | 674,957,155 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 82,730,000 | - | 77,683,663 | - | 90,787,000 | - | 84,636,479 | - |
| ஏனைய வருமானம் | 2,018,234,000 | - | 3,212,916,987 | - | 2,100,330,000 | - | 5,043,175,533 | - |

### 2.3.2 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதன வரி

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ஆதன வரி ரூபா 2,829,783,399 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 500,000 தொகையினை விஞ்சிய 718 ஆதனங்களுக்குரிய நிலுவை ஆதனவரிப் பெறுமதி ரூபா 1,413,867,572 ஆகும். அது மொத்த மீதியில் 50 சதவீதமாகும்.

(ii) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 230(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு அமைச்சரால் விநியோகிக்கப்பட்ட 1988 பெப்ரவரி 19 ஆந் திகதிய 494 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பிரகாரம் ஆதனவரி செலுத்துபவர்களுக்கு 10 சதவீதம் மற்றும் 5 சதவீத கழிவு பெற்றுக்கொள்வதற்கு உரித்தொன்று காணப்படுகின்ற போதும், முன்னைய ஆண்டிற்காக செலுத்த வேண்டிய நிலுவை மீதி அவ்வாறு காணப்படும் போது நடப்பாண்டிற்குரிய கொடுப்பனவுகள் மாத்திரம் மேற்கொண்ட நபர்களுக்காகவும் நிறுவனங்களுக்காகவும் கழிவு வழங்கப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணாக 116 ஆதனங்களுக்காக ரூபா 5,717,841 தொகையொன்று கழிவாக வழங்கப்பட்டிருந்தது. குறித்த பிரகாரம் ஆதனவரி செலுத்துபவர்களுக்கும், செலுத்தாதவர்களுக்கும் சமமாக கழிவு

வழங்கியதன் மூலம் உரிய பிரகாரம் ஆதனவரி செலுத்துபவர்களுக்கு நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 500,000 தொகைக்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரிகளுக்கிடையே அரசாங்கத்தின் 203 ஆதனங்களின் மொத்த நிலுவை ஆதனவரித் தொகை ரூபா 378,624,282 ஆகும். இது ரூபா 500,000 இற்கு மேற்பட்ட நிலுவை வரி ஆதனங்களின் எண்ணிக்கையில் 27 சதவீதமாக இருந்ததுடன் மொத்த நிலுவை ஆதனவரி வருமானத்தில் 13 சதவீதமாகும்.

(iv) ரூபா 500,000 இற்கு மேற்பட்ட நிலுவை மீதிகள் காணப்படுகின்ற ஆதனங்களுக்கிடையே 2017 ஆம் ஆண்டின் போது எந்த வரித்தொகையும் செலுத்தாத 527 ஆதனங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் மொத்த நிலுவைத் தொகையின் அளவு ரூபா 994,669,418 ஆகும்.

(v) சபையில் தற்போது காணப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டு முறைமையில் (AS400) மதிப்பீடு செய்தல் தொடர்பான விடயத்துறை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அந்த துறையை நாளதுவரையாக்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சந்தை வரி மற்றும் வியாபார வரி**

(i) 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தொழில்முயற்சி மற்றும் வியாபார வரியாக காசு அடிப்படையில் ரூபா 31,072,020 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த வருமானம் அதிக அளவில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக தொழில்முயற்சி மற்றம் வியாபார வரியாக ரூபா 66,500,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ஆண்டின் போது ரூபா 12,348,000 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 31,072,020 தொகையில் ரூபா 18,516,000 தொகை 2017 ஆம் ஆண்டிற்கு உரித்தில்லாதிருந்ததுடன் ஆண்டிற்குரிய மொத்த வருமானத்தில் இறுதிக் கணக்குகளின் மூலம் 18 சதவீதம் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1996 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 39/96 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் ஆண்டிற்குரிய வரித்தொகை அந்த ஆண்டின் போதே சேகரிப்பதற்கு அவற்றின் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர் நடவடிக்கை எடுக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கொழும்பு மாநகர சபையினால் வியாபார வரி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வினோத வரி**

கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 2017 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பிரசங்கம், சங்கீத மேடைகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்காக அறவிடப்பட்ட விநோத வரித்தொகை ரூபா 96,449,794 ஆக இருந்ததுடன் மேல் மாகாண பிரதம அமைச்சினதும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 27,552,146 தொகையான விநோத வரி விடுவிக்கப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்ட வரித்தொகை 29 சதவீதமாக இருந்தது.

**2.3.3 வாடகை**

**வீட்டு வாடகை**

கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான 18 வீடமைப்புத் தொகுதிகளில் காணப்படுகின்ற 840 வீடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த வீதிகளில் குடியிருப்பவர்களுக்கு பொது வசதிகளை வழங்குதல், வீடுகளை திருத்தியமைத்தல், குடியிருப்பாளர்கள் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்குவதல் மற்றும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்து போதியளவான வாடகையொன்றை அறவிடல் போன்ற பணிகள் சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) உயர் சந்தைப் பெறுமதியுடன் கொழும்பு மாநகர சபை எல்லையில் அமைந்துள்ள இந்த வீடுகளிலிருந்து மிகவும் குறைந்த மாதாந்த வாடகையொன்று அறவிடப்பட்டிருந்தது.

(iii) 2013 யூலை 16 ஆந் திகதிய நிதிக்குழுத் தீர்மானத்தின் மூலம் இந்த வீடுகள் புதிதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வீட்டு வாடகை ரூபா 5,10 என்ற மிகவும் குறைந்த பெறுமதியிலேயே அதிகரிக்கப்பட்டிருந்தது.

(iv) வீடமைப்புத் தொகுதிகளிலிருந்து சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகை 2017 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு ரூபா 3,892,599 ஆகக் காணப்பட்டது. இந்த வீட்டுத் தொகுதிகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய வீடுகளின் அளவொன்றில் நீண்ட காலமாக வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலுவையாக உள்ள வீடுகளின் அளவில் அரைவாசிக்கு மேற்பட்ட வீடுகளில் 10 வருடங்களுக்கு மேல் மாதாந்த வாடகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4 மிகைக் கட்டணம்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்னைய ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 03 மிகைக் கட்டண சான்றிதழ்களுக்காக 2018 யூன் 11 இல் உள்ளவாறு ரூபா 259,988.38 தொகை அறவிட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

--------------

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் மூலதன விடயங்களை நிறைவேற்றுவதற்கான உபவிதி விதிக்கப்பட வேண்டிய போதிலும், கைத்தொழில், கழிவுப்பொருள் முறைமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக உபவிதி விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

------------------------------------------------

சகல திணைக்களங்களையும் மேவுகை செய்யும் வகையில் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை**

--------------------------------------------------------------

கொழும்பு 12 பெரடைஸ் பிரதேசத்தில் லொன்றிவத்தயில் நவீன வசதிகளுடன் மாடிவீட்டு செயற்திட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு 02 வருட காலங்கள் கடந்திருந்த போதிலும், வீட்டு நலனாளிகளுக்கு இந்த வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

----------------------------------------------------------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் 81 நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 2,390,035,187 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை

**(உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

(i) கழிவுப்பொருள் சுத்திகரிப்புப் பிரிவிற்காக அவசர தேவையின் கீழ் 06 டிபர் வண்டிகள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டு 2015 யூன் முதல் 2017 திசெம்பர் 31 வரையான காலத்திற்காக ரூபா 94,612,168 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இந்த சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான பெறுகைகளின் பலவீனங்கள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையிலும், கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையின் மூலமும் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்ச்சியாக சேவைகளைப் பெற்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க நகர கழிவுப்பொருள் முகாமைத்துவ விதி 06 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம், சேகரிக்கப்பட்ட நகர கழிவுப்பொருட்களை வளமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் தமது பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் வேறு உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப்பிரதேசத்தில் கொண்டு போடுவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது கழிவுப்பொருட்கள் 146,717.49 மெட்ரிக் தொன் கொண்டு போடுவதற்காக ரூபா 292,792,603 தொகையான செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு அவற்றில் போடப்படுகின்ற கழிவுப்பொருட்களுக்கு செய்யப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக கழிவுப்பொருள் அகற்றுவதற்காக கீழேயுள்ள பிரகாரம் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| | ரூபா |
| மண் போடுவதற்காக | 76,532,171 |
| புள்டோசருக்காக (செப்பனிடுவதற்காக) | 41,738,967 |
| கெலவறபிட்டிய கழிவுப்பொருள் தளத்திற்கான நுழைவு வீதியை அபிவிருத்தி செய்யும் செலவினம் | 1,438,550 |
| | ------------------ |
| | 119,709,688 |
| | ======== |

(iii) மாநகர சபையினால் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல், போக்குவரத்துச் செய்தல், மீள்சுழற்சி செய்தல் மற்றும் அகற்றுதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்ற போதிலும், 2008 பெப்ரவரி 21 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) சுற்றாடல் பிரச்சினைகள்**

(i) பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்துகின்ற இலத்திரனியல் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக கொழும்பு மாநகர சபையால் எடுக்கப்படுகின்ற வழிமுறைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) கொழும்பு மாநகர சபையால் 2009 ஆம் ஆண்டின் ஏப்ரல் வரை சபை அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருட்கள் புளூமென்டல் பிரதேசத்தில் கொண்டு போடப்பட்டிருந்ததுடன் ‘‘புளூமென்டல் குப்பை மலை’’ என கழிவுப்பொருள் மலை தோற்றம் பெற்றிருந்தது. கழிவுப்பொருட்களை போடுதல் தொடர்பாக பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் புளூமென்டல் குப்பை மலைக்கு கழிவுப்பொருட்களை கொண்டு போடுதல் தடை செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2009 ஏப்ரல் மாதம் முதல் மீதொட்டமுல்ல பொத்துவில்கும்புற பிரதேசத்தில் 02 ஏக்கர் காணியின் அரைப்பகுதியில் 02 வருட கால எல்லைக்காக கழிவுப்பொருட்களை கொண்டு போடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. உயர்நீதிமன்ற தீர்ப்பை விஞ்சி 08 வருட காலம் வரை கழிவுப்பொருட்கள் போடப்பட்டதன் காரணமாக 23 ஏக்கர் பிரதேசம் வரை குப்பை மலை பரவி 2017 ஏப்ரல் 14 ஆந் திகதி மண்சரிவிற்கு உட்பட்டிருந்ததுடன் அந்த விபத்தால் 32 மரணங்கள் உட்பட ஆதனங்ளில் கணிசமான அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. மீதொட்டமுல்ல குப்பை மலை 2018 சனவரி மாதம் 02 சந்தர்ப்பங்களின் போது தீப்பிடிப்பிற்கும் உட்பட்டிருந்தது.

(iii) கழிவுகள் உருவாகுவதைக் குறைத்தல், கழிவுப்பொருட்களை மீண்டும் பாவனைக்கு எடுக்கும் முறைமையினை அறிமுகப்படுத்தல் மற்றும் மீள்சுழற்சிக்காக முறையானதும் விரைவானதுமான வேலைத்திட்டமொன்று தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தாது தற்போதும் சபைப் பிரதேசத்தில் கழிவுகள் இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குரிய வளவில் அகற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

கொழும்பு மாநகர சபை நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவித்திருக்காததுடன் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) பொது சுகாதாரத் திணைக்களம்**

பொது சுகாதாரத் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திணைக்களத்தின் 04 பிரதான பணிகளுக்காக ரூபா 127,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 13,075,904 தொகை அதாவது 10.3 சதவீதமே செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

### 3.2.1 அனுமதியற்ற நிர்மாணங்கள்

கொழும்பு மாநகர சபை எல்லையில் ஏதாவது கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கட்டிட திட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக 209 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. அதில் 111 முறைப்பாடுகள் முழுமையாக அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாகவும், 90 முறைப்பாடுகள் பகுதி அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாகவும் காணப்பட்டன. இதில் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக மாத்திரம் மாநகர சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

### 3.2.2 திட்டத்தை அங்கீகரித்தல்

(i) 2017 ஆம் ஆண்டில் தரச்சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட 209 விண்ணப்பங்களுக்கிடையே 82 விண்ணப்பங்களுக்கு அதாவது 44 சதவீதத்திற்காக தரச்சான்றிதழ் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் அந்த அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக சபையினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இல.04, சார்லிமன்ட் வீதி, கொழும்பு 06 என்ற இடத்தில் 08 மாடிகளையுடைய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அக்கட்டிடம் 2017 மே 18 ஆந் திகதி உடைந்து விழுந்திருந்தது. நிர்மாணங்களை அங்கீகரிப்பதற்கு முன் காப்புறுதி வேவுகை சான்றிதழ் சமர்ப்பிக்காமை தொடர்பாக உரிய சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 நிர்மாணப் பிரிவு

மாவட்ட அலுவலக இலக்கம் 03, நிர்மாணப் பிரிவின் மூலம் உத்தியோகபூர்வ வீடுகளின் இடவசதிகளை அதிகரிக்கும் பணிகளுக்காக அதன் தேவை, திட்டம் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அங்கீகாரம் மற்றும் முறையாகத் தயாரிக்கப்பட்ட திட்டமொன்று இன்றி ரூபா 2,713,581 தொகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இந்த மதிப்பீட்டை அங்கீகரிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் இதன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மதிப்பீடு இன்றிய பணிகளுக்காகவும் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

### 3.2.4 GO GREEN COLOMBO - நிகழ்ச்சித்திட்டம்

சபையின் நகர திட்டமிடல் பிரிவின் மூலம் 2018 சனவரி 13 ஆந் திகதி "GO GREEN COLOMBO" என்ற பெயரில் செயலமர்வொன்றை நடாத்துவதற்கு தேசிய செய்திப் பத்திரிகையில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இந்த அறிவித்தலுக்காக கொழும்பு மாநகர சபையின் குறியீடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயலமர்வு தனியார் துறையின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன், கொழும்பு மாநகர சபையின் உத்தியோகபூர்வ இலட்சனை அந்த செயலமர்விற்காக அச்சிடப்பட்ட அழைப்பிதழ்கள், விழா வலயம் மற்றும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் என்பவற்றில் பயன்படுத்தப்பட்டதன் மூலம் பொதுமக்களுக்கிடையே மாநகர சபை தொடர்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நன்மதிப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிலைமை ஏற்படுவதற்கு அவகாசமளிக்கப்பட்டிருந்தது.

### 3.2.5 இருப்புப் பற்றாக்குறை

சூதுவெல்ல பிரதான களஞ்சியத்தில் 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 2,102,784 தொகையான இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்புவாய்ந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய இருப்பு பற்றாக்குறையை கைவிடுவதற்கு நிதிசார் நிலையியற் குழு எடுத்த தீர்மானத்திற்கு மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 356 | 234 | 122 | - |
| மூன்றாம் நிலை | 190 | 118 | 72 | - |
| இரண்டாம் நிலை | 2,871 | 1,719 | 1,152 | - |
| ஆரம்ப நிலை | 5,373 | 3,911 | 1,462 | - |
| ஏனையவை | - | 462 | - | 462 |
| மொத்தம் | 8,790 | 6,444 | 2,808 | 462 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர் பதவியொன்று காணப்படாத போதிலும், 06 பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) 29 இடங்களுக்காக சேர்க்கப்பட்ட பாதுகாப்பு அணியினரின் எண்ணிக்கை 111 பேராக இருந்த போதிலும், 115 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமையால் பாதுகாப்பு அணியில் இல்லாத 04 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iii) மக்கள் சுகாதார திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 776 ஆக இருந்த போதிலும், தற்போது இருக்கின்ற உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 437 ஆனமையால் வெற்றிடம் 339 ஆகும்.

(iv) பாதுகாப்பு சேவையின் மேலதிக நேரப்படி செலுத்துவதற்காக மேலதிக நேரத்தை கணிப்பீடு செய்யும் போது வருகை மற்றும் வெளியேறுகைப் பதிவேடு அல்லது கைவிரல் அடையாளப் பதிவுகளுடன் ஒப்பீடு செய்து உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர மண்டப பாதுகாப்பு சேவைக்காக 06 பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர்களும், 28 பாதுகாப்பு பணியாளர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர்களும், பணிப்பாளர்களும் சேவைக்கு அறிக்கையிடுவதற்காக 02 ஏடுகள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பதிவேடுகளைப் பரீட்சித்த போது கீழே குறிப்பிடப்படுகின்ற நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) விடுமுறை பெற்றவரின் பெயர் எழுதப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்பார்வை உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(iii) பாதுகாப்பு கட்டுப்பாட்டாளரால் விடுமுறை தினத்திற்காகவும் மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) காணிப் பிரிவின் உத்தியோகத்தர் பற்றாக்குறைக்கு தீர்வாக காணிப் பிரிவிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவர் மதியுரையாளராக 2011 யூலை மாதத்தின் போது நியமிக்கப்பட்டு மாதாந்தம் ரூபா 100,000 படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் மதியுரையாளர் பதவியொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மதியுரையாளருக்கு குறித்துரைத்த பணிப்பொறுப்புக்கள் எழுத்து மூல உடன்படிக்கையின் மூலம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) காணி உத்தியோகத்தர் பதவியில் ஈடுபட்டிருக்கும் போது ஓய்வு பெற்றுச் சென்ற இந்த உத்தியோகத்தர் தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்ற காணி உத்தியோகத்தர் பதவியின் கடமைகளில் ஒரு குறிப்பிட்ட அளவை மேவுகை செய்திருந்தார்.

(ஈ) நகரத் திட்டமிடல் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட 140 பதவிகளில் 97 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 49 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் (சிவில்) வெற்றிடங்களும் அதனிடையே காணப்பட்டது. இந்த வெற்றிடங்கள் அந்தப் பிரிவின் வினைத்திறனை பாதிப்பதற்கு காரணமாக இருந்தது.

(உ) பல வருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 38,068,453 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

#### (அ) மரக்கட்டமைப்பை பரீட்சிக்கும் இயந்திரம் (Tree Scanner)

(i) நகரில் உள்ள 100 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மரங்களின் கிளை மற்றும் வேர்களின் நிலைமையை அளவீடு செய்வதற்கும், பரீட்சிப்பதற்கும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 7.4 மில்லியன் செலவில் காணி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மரக் கட்டமைப்பை பரீட்சிக்கும் இயந்திரம் 2018 யூலை 13 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் விஹாரமகாதேவி பூங்காவின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுப்பதற்காக தொழில்சார் அனுபவமுள்ள உத்தியோகத்தர் (தாவரவியல் வைத்தியர் - Arborists போன்ற) சபையில் காணப்படாமையினால் புதிய இயந்திரத்தை இதுவரையிலும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) கொழும்பு நகரத்தில் உள்ள பழைய மரங்களை இனங்காணல் இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்தலின் ஒரு நோக்கமாக இருந்த போதிலும், மரத்தின் கட்டமைப்பை பரீட்சிப்பதற்கு அந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பிரதான வீதிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் கொழும்பு நகரத்தில் மரங்கள் வீழ்ந்து காணப்பட்ட சந்தர்ப்பங்கள் காணக்கிடைத்ததுடன் இந்த இயந்திரத்தை பாவனைக்கு எடுத்து ஆபத்தானதாக உள்ள மரங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (ஆ) முதியோர் இல்லங்களுக்குரிய வாகனங்கள்

(i) முதியோர் இல்லங்களுக்கரிய 02 வான் வாகனங்கள் முறையே 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமும், ஒரு வருட காலமாக பயன்படுத்தப்படாமல் துருப்பிடித்த நிலையிலும் காணப்பட்டமையால், விற்றுத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மூன்று தடவைகள் செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு திணைக்களத்தின் தேவைக்கு பொருத்தமானது என அங்கீகரிக்கப்பட்ட நோயாளர் காவும் வண்டியொன்று (அம்பியூலன்ஸ்) 2017 யூன் 05 ஆந் திகதி ரூபா 7,464,500 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், வேறொரு அம்பியூலன்ஸ் வண்டி முதியோர் இல்லத்தில் தற்போது பயன்படுத்தப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 3.4.2 சபைக்குச் சொந்தமான அசைவுறாத ஆதனங்கள்

(அ) சபைக்குச் சொந்தமான அசையாத ஆதனங்கள் தொடர்பாக பதிவேடொன்று சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபை 151 ஆதனங்களைக் காண்பித்திருந்ததுடன், அதன் மொத்த நில அளவும் 430 ஏக்கராக இருந்தது. இந்த ஆதனங்களை கையேற்கும் சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட நிலத்தின் அளவு தற்போது அவ்வாறே காணப்படுகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை.

(ஆ) 13 ஆதனங்களின் நில அளவான 32 ஏக்கர், 01 றூட் மற்றும் 01 பேர்ச் இல் அனுமதியற்றவர்கள் குடியிருப்பதுடன் அதில் நிர்மாணங்களையும் செய்திருந்தனர். இந்த ஆதனங்களை கையேற்றதன் பின்னர் அவற்றின் இருப்பிற்காக எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடுகளும் மாநகர சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட பெறுமதியுடைய இந்த ஆதனங்களை தற்போது அல்லது அளவிடை நடவடிக்கைகளைச் செய்து பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்காதிருப்பின் அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றிக் கொள்ளுதல் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(இ) சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபையின் 18 ஆதனங்களில் அளவை செய்யப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) கொழும்பு மாநகர சபைக்குரிய மோதரை Elie House காணியில் 50 பேர்ச் 1992 யூலை மாதத்தின் போது செமட்ட சறன நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காணியின் எஞ்சிய 60 பேர்ச் செமட்ட சறன நிறுவனத்தால் தமது செயற்பாடுகளுக்காக அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதில் அனுமதியற்ற நிர்மாணங்கள் இடம்பெற்றிருந்ததுடன் அது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 காலாவதியான இருப்புக்கள்

காலாவதியான ரூபா 3,685,125 தொகையான தர்மோப்பிளாஸ்டிக் 22,975 கிலோகிராம் அளவொன்று களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன், இந்த இருப்பில் 10,000 கிலோகிராம் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே காலாவதியாகியிருந்தது.

### 3.4.4 வாகனப் பயன்பாடு

மாவட்ட அலுவலக இலக்கம் 03 இல் மலம் அகற்றல் பிரிவு, கழிவுப்பொருள் முகாமைத்துவப் பிரிவு மற்றும் நிர்மாணப் பிரிவு என்பவற்றின் வாகனங்களின் பாவனை தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பொது 268 படிவத்தில் நாளாந்த ஓட்ட அட்டவணை பேணப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் நாளாந்த ஓட்ட அட்டவணை பேணப்பட்ட சந்தர்ப்பங்களிலும் ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் முறையான பிரகாரம் பதியப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(ஆ) அனேகமான வாகனங்களில் மைலோமீற்றர் செயலிழந்திருந்தமையினால் 2017 ஆம் ஆண்டின் போது மலம் அகற்றல் பிரிவில் 08 வாகனங்களுக்காக பயன்படுத்தப்பட்ட எரிபொருள் 22,433 லீற்றருக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,103,175 தொகையும், நிர்மாணப் பிரிவில் 23 வாகனங்களுக்காகவும், கழிவுப்பொருள் முகாமைத்துவப் பிரிவில் 45 வாகனங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் 353,903 லீற்றருக்காக செலவிடப்பட்ட ரூபா 29,461,632 தொகையும் தொடர்பாக முறையான உறுதிப்படுத்தலைச் செய்ய முடியாதிருந்தது.

(இ) மலம் அகற்றல் பிரிவினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓட்ட அட்டவணைகளில் நாளாந்த எரிபொருள் நுகர்வுகள் குறிப்பிடப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது எரிபொருள் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட எரிபொருள் அளவுடன் பிரதான அலுவலகத்தின் மாதாந்த எரிபொருள் விநியோகித்தல் அறிக்கைக்கும் இடையே 3,596 லீற்றர் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.5 பெறுகைகள்

--------------------

### 3.5.1 பெறுகைத் திட்டம்

-------------------------------

சபையின் சகல திணைக்களங்களையும் மேவுகை செய்யும் வகையில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

--------------------------------------------------

(அ) மாநகர சபையினால் சத்துட்டு உயனவிற்காக 2018 ஏப்ரல் 18 ஆந் திகதி ரூபா 27,237,359 செலவில் 15 டோஜம் கார்கள், கெங்கறு றைடர் விளையாட்டு இயந்திரம் மற்றும் சிறுவர் புகையிரதம் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கெங்கறு றைடர் விளையாட்டு இயந்திரம் மற்றும் சிறுவர் புகையிரதம் என்பன குறித்துரைத்த மாதிரிகளுக்கு இணங்கியிருக்கவில்லை.

(ii) பொருத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே கெங்கறு றைடர் விளையாட்டு இயந்திரம் செயலிழந்ததால் கழற்றப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு காணப்பட்ட போதும் சபையினால் இதற்குச் தரச் சான்றிதழ் வழங்கப்பட்டு மொத்த பெறுமதியும் உரிய கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) கெங்கறு றைடர் விளையாட்டு இயந்திரம் பொருத்தப்பட்டு கையளிக்கப்பட்டதன் பின்னர் ஒரு மாதமான குறுகிய காலத்தில் பொதுமக்கள் பாவனையின் போது ஒரு கிளையும் சில ஆசனங்களும் உடைந்து ஆபத்தான நிலைக்கு உட்பட்டிருந்தது.

**(ஆ) வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்கல்**

---------------------------------------------------------------------------

(i) மோட்டார் வாகனங்களை தரித்து வைத்தல் கட்டணத்தைச் சேகரித்தல் மற்றும் முகாமைக்காக 10 கட்டங்களின் கீழ் வாகனம் நிறுத்தி வைக்கும் 12 இடங்களுக்காக 03 நிறுவனங்களுக்கு கேள்விகளைக் கையளிக்கும் போது உரிய கேள்விதாரரிடமிருந்து பதிவுச் சான்றிதழில் வியாபாரத்தின் தன்மையின் கீழ் வாகனத் தரிப்பிடத்தை முகாமைத்துவம் காண்பிக்கப்படாத நிறுவனத்திற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் சபைக்கு நிலுவை காணப்பட்டமை, வேறொரு நிறுவனம், பிணை முறியை பிழையான பெயருடன் வழங்கியதன் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், இரண்டு நிறுவனங்களும் ஒரு பிணை முறியை வழங்கியிருந்தது. எனினும், இந்த நிறுவனத்தால் போலித் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் கறுப்புப்பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வாகனத் தரிப்பிட முகாமைத்துவம் 10 கட்டங்களின் கீழ் கூறு விலை கோரும் போது போதியளவான காலம் வழங்கப்படாமையினால் மீண்டும் கூறுவிலை கோரியதன் காரணமாக ரூபா 134,645 மேலதிக செலவினமொன்றைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.5.3 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.5.3.1 விட்ஸ் வைக் விளையாட்டரங்கை நவீனமயப்படுத்தல்

மொத்த கிரய மதிப்பீடொன்று இன்றி திறந்த கூறுவிலை கோரி ரூபா 36 மில்லியன் தொகையான ஒப்பந்தம் 240 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு ICTAD 06 இற்குரிய ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ICTAD நிறுவனத்தின் வழிகாட்டல், பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக இந்த ஒப்பந்தத்தைச் செய்வதற்கு C6 பதிவு உரித்துள்ள ஒப்பந்தகாரர் தகுதியானவர் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தம் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த காலத்தை தொடர்ச்சியாக நீடித்தல் மற்றும் கவனத்தில் கொள்ளக்கூடிய மேலதிக வேலைப் பகுதிகளைச் சேர்த்தமையினால் ஒப்பந்தத்தை கையளித்தலின் செயற்றிறனின்மை செயற்திட்ட திட்டமிடலின் நலிவுகள் மற்றும் மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டது.

#### 3.5.3.2 விளையாட்டு நிலம் மற்றும் பொழுதுபோக்குத் துறை திணைக்களத்திற்குரிய கட்டிட நிர்மாணம்

2016 இன் பாதீட்டின் மூலம் 300 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. கட்டிட நிர்மாணத்திற்கும் நவீனமயப்படுத்தலுக்கும் இடையே 11 தங்குமிடங்கள், 15 சனசமூக நிலையங்கள், 06 விழா மண்டபங்கள் மற்றும் ஹேனமுல்ல விளையாட்டரங்கின் மதிலை நிர்மாணித்தல் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட 33 நிர்மாணங்களில் 20 இற்காகவும் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 04 நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் திட்டம் மாற்றமடைந்ததனால் ஆரம்பிக்கப்படாத நிர்மாணங்களின் எண்ணிக்கை 05 ஆகும்.

(ஆ) ஹேனமுல்ல விளையாட்டரங்கின் மதிலை அமைத்து பூர்த்தி செய்யப்பட்டதாக செயற்திட்ட பொறியியலாளரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்ட போதும், அந்த வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தமை கோவையை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது.

(இ) கல்யாணி கங்காறாம மாவத்தை சனசமூக நிலைய அபிவிருத்தி செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- (i) ஒப்பந்த காலத்தை நீடிக்கும் போது தாமதத்திற்கு தாக்கமளித்த விடயங்களின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் நீர் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்குமாயின் நிர்மாணச் செயற்பாடுகளை செய்வதற்குத் அந்தக் கட்டணத்தை செலுத்தி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- (ii) உரிய உடன்படிக்கையின் 49.1 ஆம் பிரிவின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் நாளொன்றிற்கு ரூபா 3,750 வீதம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், தாமதத்திற்கு காரணமான விடயங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தாமல் காலஎல்லை 59 நாட்களால் நீடிப்பதற்கு தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- (iii) இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதாக பொறியியலாளரால் 2016 திசெம்பர் 21 ஆந் திகதி பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு

அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை செய்யப்பட்ட மதிப்பீட்டாளரின் பிரகாரம் ரூபா 4.7 மில்லியன் பெறுமதியான 152 வேலை விடயங்கள் கைவிடப்பட்டிருந்தன.

(iv) நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதும் வேலைத்தள கையளித்தல் அறிக்கை அல்லது பூர்த்தி செய்தல் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2018 சனவரி 12 ஆந் திகதி வரையிலும் இந்த சனசமூக நிலையம் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹேனமுல்ல விளையாட்டரங்கின் மதில் நிர்மாணத்தின் ஒப்பந்தத் தொகை ரூபா 13,872,076 ஆக இருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 யூலை 15 ஆந் திகதியில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்தகாரரால் 2013 மே முதல் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தன. கேள்வியினை இரத்துச் செய்வதற்கு முன்னர் 2013 யூலை 13 இல் முதலாம் மற்றும் இரண்டாம் பட்டியலாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 5,084,023 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் ஆற்றப்பட்ட வேலையின் அளவு மற்றும் தரத் தன்மை தொடர்பான நிர்மாண பொறியியலாளர் மற்றும் செயற்திட்ட பொறியியலாளர் என்போர் உறுதிப்படுத்தியிருந்தனர்.

(ii) 2013 நவம்பர் 26 ஆந் திகதிய பொதுச்சபை தீர்மான இலக்கம் 585 இன் பிரகாரம் ஒப்பந்தகாரர் நிபந்தனைகளை மீறியிருந்தமையால் கேள்வியை இரத்துச்செய்வதற்கும், செயலாற்றல் பிணை முறியை சபைக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கும், செய்யப்பட்ட வேலை திருப்திகரமாக இல்லாமையினால் எந்தவொரு கொடுப்பனவும் செய்யாதிருப்பதற்கும், முற்பணம் செலுத்தப்பட்டிருக்குமாயின் அதனை அறவிடுவதற்கும், இவ்வாறான ஒப்பந்தகாரர் தொடர்பாக எதிர்காலத்தில் ஒப்பந்தங்களைக் கையளிப்பதை தவிர்த்துக் கொள்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 689,104 தொகையான செயலாற்றல் பிணைமுறி சபைக்குச் சொந்தமாக்கிக் கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

### 3.5.3.3 வீதித் தகவல் சமிஞ்சை நிர்மாணம் மற்றும் பராமரித்தல்

---

பெறுகை மதிப்பீட்டின் பின்னர் ஒப்பந்தம் தனியார் நிறுவனத்திற்கு 2010 செப்தெம்பர் 11 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்ப முன்மொழிவிற்காக மாத்திரம் மாதிரிகள் தயாரிக்கப்பட்டு புள்ளி முறைமையின் மூலம் அதிக புள்ளிகளைப் பெற்ற கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி முன்மொழிவுகள் 2010 யூலை 28 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கேள்விதாரரின் நிதிசார் முன்மொழிவு அதன் பிரகாரம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படவில்லை.

(ஆ) சபையினால் இந்த செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் தொடர்பாக மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் கேள்விதாரரின் நிதி முன்மொழிவுகள் நிறுவனத்திற்கு எவ்வளவு தூரம் நலன்வாய்ந்தது என்பது தொடர்பாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கேள்வி கோரும் பதிவேடுகளில் கேள்விதாரருக்குள்ள அறிவுரையின் கீழ் பந்தி இலக்கம் 4 இல் 4 வருடங்களுக்காக இந்த ஒப்பந்தம் வழங்கப்படுவதாகவும் மிகையூதிய (போனஸ்) செயற்திட்டத்தின் கீழ் 1525 வீதி பெயர்ப் பதாதைகள் தயாரித்தல் வெற்றிகரமாக 03 வருடங்களில் பூர்த்தி செய்ததன் பின்னர் மேலும், 03 வருடங்களுக்காக ஒப்பந்தம் நீடிக்கப்படுவதாகவும், 02 செயற்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மற்றும் நிதி உரிய பிரகாரம் செலுத்தப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் ஆகக்கூடியது 08 வருட காலத்திற்காக நீடிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்த நிறுவனத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் 02 செயற்திட்டங்களுக்கும் ஒரே தடவையில் எட்டு வருடங்களுக்காக அமுல்படுத்துவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 10 கிரேன்ட் பதாதைகள் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்கள் தொடர்பான விபரங்கள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் கேள்விதாரருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி கோரல் பதிவேட்டில் இணைப்பு II இல் புதிதாக நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட கிரேன்ட் பதாதை இடங்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்கார கம்பனியால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 10 கிரேன்ட் பதாதைகள் தொடர்பான விபரம் 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அவை கேள்வி கோரல் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட இடங்களுடன் ஒப்பீடு செய்த போது நிர்மாணிக்கப்பட்ட 07 கிரேன்ட் பதாதைகளின் இடங்கள் சபை எதிர்பார்த்த இடங்களாக இருக்கவில்லை.

(உ) அந்தக் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட 3737 ஆம் இலக்க உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) உடன்படிக்கையின் பந்தி இலக்கம் 11 இன் பிரகாரம் ஒவ்வொரு கிரேன்ட் பதாதைகளிலும் காட்சிப்படுத்தப்பட்ட வியாபார அறிவித்தல்களில் Art Work இற்காக பிரதி நகர ஆணையாளர் (பொறியியல் சேவை) எழுத்து மூலம் அங்கீகரித்திருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் பந்தி இலக்கம் 23 இன் பிரகாரம் வியாபார அறிவித்தல் அனைத்திற்காகவும் பிரதி நகர ஆணையாளர் (பொறியியல் சேவை) எழுத்து மூலம் அங்கீகரித்திருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் பந்தி இலக்கம் 14 இன் பிரகாரம் வீதி பெயர்ப் பதாதைகளில் வியாபார அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் அமுலாகும் வகையில் வருடாந்த வியாபார அறிவித்தல் கட்டணம் ஒப்பந்தகாரரினால் சபைக்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், அறவிடப்படுகின்ற கட்டணத்தின் பெறுமதி மற்றும் அறவிடப்படுகின்ற முறை தொடர்பான விபரம் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கையின் பந்தி இலக்கம் (1) இல் (C)(D)(E) ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த திகதியில் உள்ளவாறு பெயர் பதாதை பூர்த்தி செய்யப்பட்டிருக்குமாயின் அறவிடப்பட்ட கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு சபைக்கு அறவிட வேண்டிய தொகை ரூபா 3,609,724 ஆக இருக்க வேண்டிய போதிலும், 2013 முதல் 2017 வரை நில வாடகையாக சபை 3,066,473 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டணம் குறைவாக அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அந்த நிறுவனத்தால் 2013 மே 07 ஆந் திகதி பிரதி நகர ஆணையாளருக்கு (பொறியியல் சேவை) அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அத்திகதி வரையில்

1267 வீதி பெயர்ப்பதாதைகள் குறித்த திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.5.3.4 கொழும்பு 14, மாதம்பிட்டிய 350 வத்தையின் விழா மண்டபம்**

(i) 2001 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 5,422,854 கிரயமான விழா மண்டபம் ஒன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் உடைத்து அகற்றப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட கட்டிடம் 2015 ஆம் ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்டு அந்த இடத்திலேயே மீண்டும் புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கு 2015 சனவரி 30 ஆந் திகதி ரூபா 42,880,634 தொகையான ஒப்பந்தம் தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 27 ஆந் திகதி ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 யூன் 29 ஆந் திகதி வரையில் அந்த நிறுவனத்திற்கு ரூபா 21,873,945 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அறவிட வேண்டிய ஆகக் கூடிய தாமதக் கட்டணம் ரூபா 4,288,063 ஆக இருந்ததுடன், இதுவரையிலும் அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 3,838,628 ஆகும். இதன் பிரகாரம் மேலும் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 449,435 ஆகும். முற்பணம் ரூபா 6,807,542 தொகைக்காக செலவிடப்பட்டவைகளில் கழிக்கப்பட்ட தொகை ரூபா 4,718,541 ஆக இருந்த போதிலும் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 2,089,000 ஆகும். 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) (i) 14 வருமான விடயங்களுக்கான வருமானங்கள் குறைவாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விஞ்சி உள்ளபடியான வருமான அறவிடலின் சதவீதம் 65.75 முதல் 754,656 சதவீதம் வரை உயர்ந்த வீச்சினைக் கொண்டது. 13 வருமான விடயங்களுக்குக்காக ரூபா 55,026.8 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் எந்தவொரு வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 20 வருமான விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 377 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 95 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் அறவிடப்படாத சதவீதம் 1 முதல் 50 சதவீதம் வரையிலான உயர்ந்த வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) அரசாங்க மானியம்**

மத்திய அரசின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 190 மில்லியனில் 47 சதவீதம் மட்டுமே கிடைத்திருந்தது. சபை தனது நீண்டகால நோக்கம் தொடர்பில் அடைந்து கொள்வதற்கு சரியான திட்டமொன்றை இல்லாமையினால் இவ்வாறு மூலதன செலவின விடயத்திற்காக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த இந்த மானியம் போதியளவான பிரகாரம் பெற முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட பதிலளிக்கப்படாத 14 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 167,521,046 ஆக இருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது நகர ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | உரிய பிரகாரம் பதிவேடு பேணப்படாமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் சரியாக சேகரிக்கப்படாமை. |
| | | (ii) | ஆதனங்களை மதிப்பீடு செய்தல் உரிய காலத்தில் இடம்பெறாமை |
| (இ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் சரியான பிரகாரம் இடம்பெறாமை. மற்றும் சகல களஞ்சியங்களும் மெய்மையாய்விற்கு உட்படாமை. |
| | | (ii) | மெய்மையாய்வுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| | | (iii) | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக சரியான வழிமுறைகள் எடுக்காமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | பொருத்தமானதும் சரியானதுமான மதிப்பீடு தயாரிக்கப்படாமை. |
| (உ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | முறையாக கழிவுப்பொருட்களை அகற்றுதல், கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்தல் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாமை |